# செங்கோட்டை நகர்மன்றம்

## செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 14.03.2023 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சியின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு அறிக்கை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண் ;226/2023/பி1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:201 : மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 02 :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்:7, நாள்:20.01.2023ல் Amrut 2.0 திட்டத்தின் கீழ் செங்கோட்டை நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 7, சர்வே எண்:H3–7–1.8.84ல் அமைந்துள்ள குளத்தினை ரூ.28.00 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணிக்கு GOI Share ரூ.14.00 லட்சம், GOT Share ரூ.8.00 லட்சம் மற்றும் ULB Share ரூ.6.00 லட்சம் செலவிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.6.00 லட்சம் குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 202 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 03 :**

தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.164.00 லட்சம் மதிப்பீட்டில் Biomining திட்டப்பணி மேற்கொள்ள 09.01.2023அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த விதிதம் |
|---|---|---|
| 1. | S.ஆறுமுகம் | மதிப்பீட்டை விட 0.39% குறைவு |
| 2. | Prago Green Pvt. Ltd Nagercoil | மதிப்பீட்டை விட 0.52% குறைவு |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் Prago Green Pvt. Ltdன் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மானம் எண் 203 : குறைந்த விலை விகிதம் தந்துள்ள Prago Green Pvt LTD, Nagarcoil–க்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப் பொருள் 04 :</u>

செங்கோட்டை நகராட்சி சுகாதார பிரிவின் மூலம் இந்நகர பகுதியில் உள்ள குடியிருப்பு வீடுகளில் இருந்து மக்கும் குப்பைகள் மற்றும் மக்கா குப்பைகளை தரம் பிரித்து தினசரி பெற்று வருகின்றனர். தற்பொழுது உள்ள குப்பைத் தொட்டிகள் மிகுந்த சேதாரம் ஆகி விட்டதால், தூய்மைப் பணிகளில் ஏற்படும் தொய்வினை சரி செய்வதற்கு ஏதுவாக தரம் பிரித்து குப்பைகளை வாங்கும் பணியில் பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகளில் உள்ள 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டிகள் (Bins) பச்சை நிறம் மற்றும் ஊதா நிறக் குப்பைத் தொட்டிகள் மொத்தம் 96 எண்ணம் தகுதி வாய்ந்த தனியார் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,40,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 1551/2021/எச்1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 204 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப் பொருள் 05 :</u>

15வது நிதிக்குழு 2021–2022 Untied Grant ன் கீழ் 48 எண்ணங்கள் LED விளக்குகள் ரூ.3.95 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவும் பணி மேற்கொள்ள 28.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த விதிதம் |
|---|---|---|
| 1. | M/s Sabarai Electricals | மதிப்பீட்டை விட 19.93% குறைவு |
| 2. | M/s Midas Electricals Pvt. Ltd | மதிப்பீட்டை விட 22.27% குறைவு |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் M/s Midas Electricals Pvt. Ltdன் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மானம் எண் 205 : குறைந்த விலை விகிதம் தந்துள்ள M/s Midas Electricals Pvt LTD–க்கு மன்றம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 06 :</u>**

நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையரை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் தொடர்பாக வரப்பெற்ற, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப1) துறை அரசாணை எண் 10 நாள் 23-01-2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.264/2023/சி1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் : அரசாணை முறைப்படி மன்றம் பதிவு செய்யப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 07 :</u>**

செங்கோட்டை நகராட்சி அலுவலக பணிக்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களுக்கு Tonner Refilling செய்ய வேண்டிய இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனத்திடமிருந்து மன்றத்தின் முன் அனுமதியினை எதிர நோக்கி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | உள்ளூர் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி ரூ, |
|---|---|---|---|
| 1. | Tonner Refilling and Drum Refilling Work | எம்பயர்பிரிண்ட் டெக்னாலஜி, தென்காசி | ரூ.500/- One Tonner |
| 2. | | Fast Computers, தென்காசி | ரூ.700/- One Tonner |
| 3. | | Essar Computers, தென்காசி | ரூ.650/- One Tonner |

அலுவலகக் குறிப்பு

1. பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எம்பயர்பிரிண்ட் டெக்னாலஜி, தென்காசி நிறுவனத்தின் விலைப்புள்ளிகளை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கேரரியமைக்கும்,வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் பின்னேற்வு வழங்கலாம்.
3. மேலும் இவ்வலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் பிரிண்டர்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால், உடன் பழுது பணிகள் எம்பயர் பிரிண்ட் டெக்னாலஜி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் செலவுத் தொகைகளை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 207 : அலுவலக குறிப்பை மன்றத்தில் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 08 :</u>**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 116 நாள்.24.08.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.32945/2022/EA2/SWM5 நாள்.10.01.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யதமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.43260/-ஐ Elegant Publicities, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.71/2023/H1)

அலுவலக குறிப்பு : மேற்கண்ட தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 208 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 09 :</u>**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குலசேகரநாத சுவாமி திருக்கோயில் திரு விழா நடைபெற்றதை முன்னிட்டு 03.02.2023ல் தேரோட்டத்தின் போது நான்கு ரத வீதிகளிலும் தண்ணீர் தெளித்தல் மற்றும் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மேற்படி திருக்கோவில் சார்பில் கோரப்பட்டதை தொடர்ந்து நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தக்காரர் திரு.அசன்கனி மூலம் மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இப்பணிக்கான செலவினம் ரூ.8000/- வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கும்டி பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 209 : அலுவலக குறிப்பை மன்றம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 10 :</u>**

SUIDF (State Urban Infrastructure Development Fund) திட்டத்தின் கீழ் ரூ.92.75 லட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியிலுள்ள 900 குழாய் விளக்குகளை LED விளக்குளாக மாற்றி

அமைக்கவும் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் 28.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த விதிதம் |
|---|---|---|
| 1. | M/s Sabarai Electricals | மதிப்பீட்டை விட 10.07% அதிகம் |
| 2. | M/s Midas Electricals Pvt. Ltd | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் M/s Midas Electricals Pvt. Ltdன் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மானம் எண் 210 : அலுவலக குறிப்பை ஏற்று மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 11 :</u>**

செங்கோட்டை நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN76 AA 1237–ற்கு ஆயில் மாற்றப்பட்டு 20,000 கிலோ மீட்டர் ஓடிவிட்டப்படியால் புதிதாக இன்ஜின் ஆயில் மாற்றுவதற்கும் மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யவும் ரூ.73,000/–ற்கு Derik Motors (P) Ltd நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தில் இன்ஜின் ஆயில் மாற்றவும், பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 211 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**.

**<u>மன்றப் பொருள் 12 :</u>**

செங்கோட்டை நகராட்சி பம்பு ஹவுஸ் ரோட்டில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்துள்ள கோடை கால நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் அளவு குறைவாக உள்ளது. தற்போது கோடை காலம் ஆரம்பிக்கப்பட உள்ளதால் மேற்படி நீர்த்தேக்க தொட்டியினை தூர்வாரும் பணி மேற்கொள்ள ரூ.5,00,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 212 : செலவு தொகை அதிகமாக உள்ளதால் குறைவான செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி